# வெள்ளியங்கிரி யாத்திரை




## தென் கயிலாயம்-11

கொங்கு மண்டலத்தைச் சேர்ந்த பல பக்தர்கள் காவடி சுமந்து, ஆடிப் பாடியபடி மலையேறுவதுண்டு. பலர், வேண்டுதல்கள் நிறைவேறிய பின் சூலங்கள் செய்து அர்ப்பணிப்பார்கள். அவ்விதம் அர்ப்பணிக்கப்பட்ட சூலங்களே கிரிமலைத்திட்டில் வேலியாக அமைந்திருக்கிறது. மாலை அணிந்து, ஒரு மண்டலம் விரதமிருந்து யாத்திரை செல்வது நல்லது. மஞ்சள் துணியில் எள்ளைக் கட்டி, பூஜையில் வைத்து, இருமுடியாக சுமந்து சென்று எண்ணெயில் தீபமிடலாம். உடல் களைத்து நடந்து வரும் பக்தர்களுக்கு அன்னதானம் செய்வது அந்த ஈசனுக்கே செய்வதற்கு சமம். தேவையற்ற பேச்சுகளைக் குறைத்து, சிவ உச்சாடனமும், பஞ்சாட்சர மந்திரமும் உச்சரித்தபடி நடப்பது யாத்திரையை மேம்படுத்தும்.

கிரிமலைத் திட்டு மிகச்சிறியது. இதில் ஈசன் குகைக்குப் பின்புறம் 100 பேர் தங்குமளவு ஒரு குகை உண்டு. இந்தக் குகைக்குள் தியானிக்கலாம். களைப்பு நீங்க ஓய்வெடுக்கலாம். இம்மலையின் தெற்குப்புற சரிவில் இறங்கி நடந்தால் பாதாள முகப்பில் இருக்கிறது ஒரு மீன்வாய் குகை. புனிதமும், பெருமையும், சக்தியும் பொதிந்த ஒரு சித்தரின் உயிர் உறைந்த இடம். அந்த அருளாளர், சத்குரு ஸ்ரீபிரம்மா.

தேனி மாவட்டம் ம.சுப்புலாபுரம், நீலகிரி, பழநி, திருவானைக்காவல் ஆகிய பகுதிகளில் இவர் நியமித்த ஆசிரமங்கள் இயங்கி வருகின்றன. தன்னை வணங்குபவரை 'நல்லது' என்ற சொல்லின் மூலம் வாழ்த்தும் இந்தச் சித்தர், அருள் ததும்பும் பல பாடல்களை இயற்றியுள்ளார். நூறாண்டுகளுக்கு முன்பே நீலகிரி மலையில் வாழும் பழங்குடியினருக்கு ஆன்மிகப் பயிற்சி அளித்தவர். சமபந்தி விருந்துகள் மூலம் ஏற்றத்தாழ்வுகளை நீக்கி, ஆன்மிக சமநிலை ஏற்படுத்திய இந்த மகானை, ஆங்கிலேய அரசு புரட்சியாளராகக் கருதி சிறையில் அடைத்தது. தன் சித்தத் திறனைப் பயன்படுத்தி கம்பிகள் வழியாக வெளியேறினார். இறுதியில், கிரி


சத்குரு ஸ்ரீபிரம்மா



### 3 முறை யாத்திரை செல்வது நல்லது



தென் கயிலாயம் என்ற சிறப்புக்குரியது வெள்ளியங்கிரி. பேரூரில் திருமாலும் நான்முகனும், பட்டிமுனி, கோமுனியாக வழிபட்டபோது, இம்மலையையும் வழிபட்டுள்ளார்கள். காமதேனு இந்த மலையில் தவழ்ந்து விளையாடியுள்ளது. ஏழாவது மலையில் 'சோமாஸ்கந்தர்' என்று சொல்லக்கூடிய 'சேயிடைபாகன்' என்ற சுயம்பு அமைப்பும், விநாயகர் உருவ அமைப்பும் உள்ளது. கொங்கு மண்டலத்தைச் சுற்றியுள்ள பகுதிகளில் 24 நாட்கள், 48 நாட்கள் விரதமிருந்து தங்கள் ஊரில் இருந்தே பாதயாத்திரையாக வந்து மலையேறி, ஈசனை தரிசிப்பார்கள் பக்தர்கள். பால், தயிர், இளநீர் சுமந்து சென்று அபிஷேகம் செய்வார்கள். இந்த மலையில் மூன்று முறை யாத்திரை சென்றால் நல்லது என்பது மூத்தோர் நெறிமுறை. தெய்வீக சக்திமிகுந்த சுனைகள் இம்மலையில் உள்ளன. சிரவை ஆதீனம் இரண்டாவது குருமகா சந்நிதானம் கந்தசாமி சுவாமிகள், கச்சியப்ப முனிவர், பேரூர் ஆதீனம் சாந்தலிங்க அடிகளார் திருமடம் ஆகியோர் இம்மலையைப் பற்றி திருப்பாடல்கள் பாடியுள்ளார்கள்.

**- பேரூர் ஆதீனம் இளையபட்டம் தவத்திரு மருதாசல அடிகளார்**

மலைக் குகைகளில் தவம்புரிந்த ஸ்ரீபிரம்மா, இந்த மீன்வாய் குகையில் உடலை உதறிவிட்டு, 'இவன் திரும்ப வருவான்' என்ற பிரகடனத்துடன் இறைநிலை எய்தினார். பொதுவாக, உயிர் பிரிகிறபோது உடலில் உள்ள ஏதேனும் ஒரு ஆன்ம சக்கரத்தின் வழியாகவே வெளியேறும். ஆனால் ஏழு சக்கரங்கள் வழியாகவும் வெளியேறினார் ஸ்ரீபிரம்மா.

அவர் உடல்நீத்த மீன்வாய் குகைக்குள் அமர்ந்து தியானித்தால், சித்த தத்துவத்தின் சூட்சும ஞானத்தை கிரகிக்கலாம். ஆபத்துக்கு வெகு அருகில் இருப்பதால் பக்தர்கள் பெரும்பாலும் இந்த குகைக்குச் செல்வதில்லை.

நிகரில்லா தவ வலிமை காரணமாக ஆத்ம சாதனையில் ஈடுபட்ட பலருக்கு ஞானோதயம் வழங்கிய பழநி சுவாமிகள் சமாதியடைந்ததும் இந்த கிரிமலையில் தான். தவயோகிகள் பலரும் தலைவணங்கும் தன்மை கொண்ட இந்த சித்தர், பழநிமலை, மருதமலையில் சுற்றித் திரிந்து இறுதியில் வெள்ளியங்கிரிக்கு வந்து உடல் நீத்தார்.

இவர்களைப் போல, பல அருளாளர்களின் நிழல் பரவிய பாறைகளில்தான் நாம் நடந்தோம். அவர்கள் நிலைநிறுத்திச் சென்றுள்ள நிரந்தர அதிர்வுகள் நம் உடலில் கலந்து நம்மை வழிநடத்துகிறது. அவர்கள் வணங்கி, அபிஷேகித்து அருள் பெற்ற பஞ்சேஸ்வரனைத்தான் நாமும் வணங்கி தலைபணிந்தோம்.

திருக்கார்த்திகை அன்று கிரிமலை உச்சியில் மகாதீபம் ஏற்றப்படும். ஒவ்வொரு வருடமும் பங்குனி மாதம், உலக நலன் வேண்டி, பேரூர் ஆதீனம் சார்பில் அடிவாரத்திலும், கிரி மலையிலும் செந்தமிழில் மகாவேள்வி நடத்தப்படுகிறது. மலையை ஒட்டிவாழும் பழங்குடியினர், ஆண்டுதோறும் தங்கள் வழக்கப்படி இம்மலையில் பூஜை செய்கிறார்கள். இம்மலைக்கு அருகில் இருக்கும் ஈஷா யோகா மையத்தைச் சேர்ந்த சந்நியாசிகள் வருடந்தோறும் இந்த திருமலையேறி ஈசனைப் போற்றி, சத்குரு ஸ்ரீபிரம்மா உடல்நீத்த இடத்தில் தியானித்து திரும்புகிறார்கள்.

ஈசனே மலையாய் சமைந்து நிற்கும் ஒரு புனிதத்தலத்தில், ஈசனே தன் வாயால் 'தட்சிண கயிலாயம்' என்று உரைத்த இணையில்லாத இந்த வெளியில், கோடானுகோடி முனிவர்களும், சித்தர்களும் தங்கள் தவ அதிர்வை வெளிப்படுத்திய, பரவசம் ததும்பும் இந்த இடத்தில் யாத்திரை நிகழ்த்தியது நம்மால் ஆன காரியம் அல்ல.. 'அவன் அருளாலே, அவன் தாள் வணங்கி...' என்பாரே மாணிக்கவாசகர்; அதுவே நிதர்சனம். மலையிறங்கி வந்தபின், உங்கள் வாழ்வில், உடலில், மனதில் ஏற்படும் மாற்றங்களே இந்த புனித மலையின் சக்திக்கும், மகத்துவத்துக்கும் சாட்சி.

எல்லாமே சிவம்... சிவமே எல்லாம்..!

**- வெ.நீலகண்டன்** படங்கள்: **புதூர் சரவணன்**

**(யாத்திரை நிறைந்தது)**



### யாத்திரை செல்ல...

கோவையில் இருந்து பேரூர் வழியாக சிறுவாணி பிரதான சாலையில் பயணித்தால், இருட்டுப்பள்ளம் என்ற ஊர் வரும். அங்கிருந்து வலதுபுறம் திரும்பினால், செம்மேடு வழியாக வெள்ளியங்கிரி அடிவாரமாகிய பூண்டியை அடையலாம். கோவை காந்திபுரத்தில் இருந்து பேருந்து வசதிகள் உண்டு. யாத்திரை தொடர்பான உதவிகளுக்கு, தென்கயிலாய பக்திப் பேரவையை அணுகலாம். அலைபேசி எண்: 94431 45660, 94431 35660, 0422 2515595.